# INTERPLANETARY WELFARE ACTION FOLK SONGS

By 'E. S. C. O.' Poet Vedanayaga Sastrya of Tanjore Palace of Tamil world.

( Prof: of Tamil Studies and Learning in 1800 )

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARA... + TANJORE +

# நடிப்பு நாட்டுப் பாடல்கள்

## (பாகம்—1)

பல்கலை மகா கவி **வேதநாயக சாஸ்திரியார்**
(திருநெல்வேலி — தஞ்சாவூர்.)
1800-ல் இயற்றியது.

( Contemporary oi Sri Thyagaraja )

(Buy for Scouts', Students' Assembly, Rally, Camps, கும்மி, கோலாட்டம், டான்சு, டிராமா, செய்கைப் பாட்டுகள் சினிமா, *For Publication as Part in Text Books.* Schools, Colleges, Associations, Unions, Libraries. Trg. Basic, Edl Social, Cultural Organisations, Parties, Functions, Villages Welfare, Development, Schemes, Rural, Fields sowing, Plantations, Families etc.)

*Compiled by Tamizl Nadu*

**Price 8 As.**

THEO-PHILUS. V.

*Sold in Book Depots.*

தெய்வ நேசன்,
Radio Talk, 1941.

# INTERPLANETARY WELFARE
# ACTION FOLK SONGS

'E. S. C. O.' Poet Vedanayaga Sastryar
of Tanjore Palace of Tamil world.
(Prof: of Tamil Studies and Learning in 1800)

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATI MAHAL LIBRARY + TANJORE +

s l
ow

## —டிப்பு நாட்டுப் பாடல்கள்

(பாகம்—1)

ல்கலை மகா கவி **வேதநாயக சாஸ்திரியார்**
(திருநெல்வேலி — தஞ்சாவூர்.)
1800-ல் இயற்றியது.

(Contemporary of Sri Thyagaraja)

r Scouts', Students' Assembly, Rally, Camps,
கோலாட்டம், டான்சு, டிராமா, செய்கைப் பாட்டுகள்

*For Publication as Part in Text Books.*

Colleges, Associations, Unions, Libraries, Trg. Basic,
ial, Cultural Organisations, Parties, Functions, Villages
are, Development, Schemes, Rural, Fields sowing,
Plantations, Families etc.)

*d by Tamizl Nadu*
EO-PHILUS. V.
தெய்வ நேசன்,
dio Talk, 1941.

**Price 8 As.**
*Sold in Book Depots*

# செய்கை நாட்டுப் பாடல்கள்.

## Action Folk Songs.

தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு
தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு.

1. அள்ளியள்ளித் தருமமெல்லாஞ் செய்யு மிந்தக்கையே
அருளான கிருபைநதி பெருகுமிந்தக்கையே
கள்ளமற்று உபகாரம் பெய்யுமிந்தக்கையே
கற்றவர்க்குப் பணிவிடைகள் செய்யுமிந்தக்கையே
தெள்ளுதமிழ்ப் பாவலரை பரிசளிக்குங்கையே
சித்திரமாய்ப் புஸ்தகங்கள் வைத்திருக்குங் கையே
வெள்ளைநிலைத் துகிலதனைக் கொய்துடுக்குங்கையே
மேலான நன்மையெல்லாம் விளையுமிந்தக்கையே— (தின)

2. இல்லார்க்குக் கேட்டதெல்லாம் கொடுக்குமிந்தக்கையே
யேழைகளை யாதரித்துத் தாங்குமிந்தக்கையே
பொல்லாப்பில் விழுந்தவரைத் தூக்கிவிடுங்கையே
பொற்பரம மோட்சவழி காட்டுமிந்தக்கையே
நல்லாரைக் கண்டவுடன் றேத்திரஞ்சொல்கையே
நட்டணையாந் துட்டர்களை மட்டில்வைக்குங்கையே
சல்லாபமாய் நடந்து வீசிவருங்கையே
சகலசம்பத் தும்பெருகித் தழைக்குமிந்தக்கையே- (தின)

நான நன்ன நன்ன நான நன்ன நன்ன
நானநன்ன நானநன்ன நானனன.

1. தேவ முத்திரையிட்ட கையைக்காட்டாய்—வளர்
சிலுவை முத்திரையிட்ட கையைக்காட்டாய்
காவிற் கனிபறித்த கையைக்காட்டாய்-யேசு

கத்தனை யபிஷேகித்த கையைக்காட்டாய்
கூவிக் குவித்து நிற்கும் கையைக்காட்டாய்—ஐயைக்
கும்பிட்டர்ச்சனைசெயுங் கையைக்காட்டாய்
சாவற் றுயர்ந்தபெத்லேம் நன்னர்க்குள்ளே—வந்த
தருமசஞ் சீவியேயுன் கையைக்காட்டாய்

2. தோத்திரச்செபமாலைதொட்ட கையைக்காட்டாய்—தேவ
சுதனுக்அமுதளித்த கையைக்காட்டாய்
சாத்திரமெல்லாம்வரைந்த கையைக்காட்டா—யொளிர்
தற்சிசின் ரத்தினத்தின் கையைக்காட்டாய்
பாத்திரம றிந்துசெய்யுங் கையைக்காட்டா—யேசர்
பண்டுதந்த பொற்சரியின் கையைக்காட்டாய்
காத்திர இறைத்தவிது கோத்திரத்தில்வாழ்—தேவ
கன்னியா ஸ்திரியேஉந்தன் கையைக்காட்டாய்.

3. சலுகை மணிணைப்பற்றுங் கையைக்காட்டாய்—சீவ
தண்ணீர்வாங் கிக்குடிக்குங் கையைக்காட்டாய்
திலதவொளித்தீபங்கொண்ட கையைக்காட்டாய்—புத்திச்
சித்தியாலெண்ணெய் கொண்டுபோங் கையைக்காட்டாய்
வலியஅப ரஞ்சியின்மின் கையைக்காட்டாய்—ஞான
மணமோதி ரந்தரித்த கையைக்காட்டாய்
நிலைய துயர்ந்தபெத்லேம் ராசனிடம்வாழ்—சதா
நித்தியசோ பனமேஉன் கையைக்காட்டாய்.

1. சந்தரஞ்சேர் யூதேயாவ ஞந்திரத்திலே—யன்று
தூயவனிஸ் நாதகயொ வான்றிரத்திலே
வந்துபிர சங்கவா ராதனையெண்ணி—யோர்தான்
மாநதியின் பாலிருந்து போதனை பண்ணி.

2. எறியிற் றகைத்திடுவ ராதலாலே—யவர்க்
கேற்ற தவம்புரியுங் காதலாலே
யுருகி மனந்திரும்பித் தவசுபண்ணி—நெறி
யொழுங்கி நடந்ததிக ஜெபங்கள் நண்ணி

3. தொடர்ந்திரண்டு சட்டையுளோனென்றெடுத்து—படுந்
துயரத்த ரித்திருக் கேகொடுத்து
அடர்ந்து பொசிப்புள்ளோ ரிந்தப்படியே—யிட
ரானவனைவருக்குஞ் சிந்தைப்படியே

4. நிரவி நிரவிப்பள் ளத்தைமுடும் பொல்லா
நிரட்டு முரட்டுவழி களைப்போடும்
பரவி மலையுமேடுஞ் சரிபடுத்தும்—பொல்லாப்
படுங்குழி குன்றுகளை வரிப்படுத்தும்.

1. சின்னவெளிச்சமல்லோநீ வெண்ணிலாவே! நாற்
றினத்திலுண்டானயல்லோ வெண்ணிலாவே!
தன்னொளியுனக்கில்லாதால் வெண்ணிலாவே! ஆதித்
தன்னொளியைக் கொண்டுயர்ந்தாய் வெண்ணிலாவே!
என்னமதிகொண்டெழுந்தாய் வெண்ணிலாவே! சாலே
மெருசலேம் வீதியிலே வெண்ணிலாவே!
கன்னியர்க்குள் நானொருபெண் வெண்ணிலாவே! யெனைக்
காய்ந்துகொல்ல வேண்டாஞ்சொன்னேன்
வெண்ணிலாவே!

2. திங்களென்ற பேர்கொண்டதென் வெண்ணிலாவே!
செவ்வாய்க்குப் பின்பிறந்தும் வெண்ணிலாவே நீ
அங்கொருநாட் சொப்பனத்தில் வெண்ணிலாவே!
யோசேப்
படிவணங்க் கொண்டாயல்லோ வெண்ணிலாவே!

துங்கயோசுவன் சண்டையில் வெண்ணிலாவே! யுனைச்
சூரியன்பின் னிற்கச்செய்தான் வெண்ணிலாவே!
மங்களச்சீயோன்குமாரி வெண்ணிலாவே! யுனை
வைத்தவிடந் தெரியாதோ வெண்ணிலாவே!

தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு
தெங்தேந்தினத் தெங்தேந்தினத் தெங்தேந்தினத் தினனு.

1. ஆதிமலையெங்களுக்கோ ஏதன்மலையம்மே
ஆண்டவனு எங்களைத்தா னமைத்தமலையம்மே
நீதியென்றநால்வரமுங் கொடுத்தமலையம்மே
நித்தியமும் சாகாம நின்றமலையம்மே
சாதனையாய்ப் பேய்பிறகு கெடுத்தமலையம்மே
தற்பரனு எம்மையங்கே சபித்தமலையம்மே
பேதகமாம் நாங்களதை விட்டதற் பின்னம்மே
பெத்தலேகம் எங்களுக்குப் பெரியமலையம்மே—

2. எங்கள்குலம் ஞானமிகுங் குறவர்குலமம்மே
யெங்களுக்குச் சரிகுலங்க ளெங்குமில்லையம்மே
பின்குலத்திற் பெண்கள்கொடோம் பெண்களையுங்கொள்
பேசுதற்கிங் கெங்கள்குலம் ராசர்குலமம்மே [ளோம்
மங்களஞ்சேர் தீட்சைபெற்றோர்க் கெங்கள்பெண்ணைக்
[கொடுப்போம்
மாருட்டக் காரருக்கு வீருப்பாய்த்திரிவோம்
புங்கமுடன் கிறிஸ்தவர்க்கு மலைகளெல்லாங் கொடுப்போம்
புகழ்பெறுபெத் லேகமெங்கள் புதுமைமலையம்மே— தின

பாவஞ் செய்யாதே நீ நெஞ்சே நாளைத்
தேவநடுத்தீர்வை செய்வானென்றஞ்சே
ஆனந்தம் குருபாதம் ஞானம்பர

1. ஆவியிருக்கின்ற கூடு என்றும்
அழியாதிருப்பதே யானந்தவீடு
ஜீவனின்பாதை கண்டோடு சாபத்
தீட்டையுங்கேட்டையுங் கைவிட்டுப்போடு. பாவ.

2. மெய்யான வார்த்தையைச் சொல்லு அந்த
மேலோக ராசாவின் வீதியிற்செல்லு
பொய்யான மாயைவெல்லு மெத்தப்
புத்தியாய்ப் பத்தியாய்ச் சித்தமாய் நில்லு பாவ.

3. வாழ்வைச் சதமென்றிராதே கெட்ட
மாய்மாலக்காரர் வளவில் வராதே
தாழ்வைப் புறக்குத்தராதே சதி
சற்பனை செய்வது சாமிக்கோராதே பாவ.

4. வன்மத்தைப் பேணி வையாதே தீய
வஞ்சகஞ் சூது கவடுசெய்யாதே
கன்மத்தில் வீழ்ந்து தொய்யாதே நல்ல
காலத்தை வீணிற் ணையாதே பாவ.

5. ஆசைக்குள் வீழ்ந்து சாகாதே மிக்க
ஆத்தும வாழ்வை யிழந்துபோகாதே
நீசக்குழிக்குள் வேகாதே தேவ
நித்திய கோபக்கினைக்கேதுவாகாதே பாவ.

6. சத்துருப் பேயைநாடாதே கன்மச்
சண்டாளப் பாவிகளோடு கூடாதே
புத்தி கெட்டெங்குமோடாதே நாளைப்
பொன்றும் நரனைப் புகழ்ந்து பாடாதே. பாவ,

ஆடுபாம்பே யெழுந்தாடுபாம்பே கிறிஸ்
தண்ணலைக் கொண்டாடிக் கொண்டாடு பாம்பே

1. நாடும் பராபரன் கிருபையாலே மோசே
நடுங்கக் கைக்கோற்குள்நின்ற நல்லபாம்பே
நாகப்பாம்பே விவேகப்பாம்பே
நாதாந்த சித்தாந்த நற்குணப்பாம்பே ஆடு.

2. கனிந்து கனிந்து கடவுளை நோக்கியொரு
கருத்தின் மனத்தைப் பரவசமாக்கி
யனந்த சந்தோட மென்றாடு பாம்பே பர
மானந்தக் களிப்புக் கொண்டாடு பாம்பே
அந்தப் பாம்பே கனவிந்தைப்பாம்பே
அப்பாலுக் கப்பானின்றாடு பாம்பே ஆடு.

3. காவாதி தோட்டத்தில் வந்த பாம்பு அது
கள்ளப்பாம்பாகாத கொள்ளிப்பாம்பு
ஏவாளை ஏய்த்துக்கெடுத்த பாம்பு உல
கெங்குந்திரியுதென் றாடுபாம்பே
யிந்தப்பாம்பு மாதந்திரப்பாம்பு.
எவரையுங் கடித்ததென் றாடுபாம்பே ஆடு.

4. தந்திரம்பிசாசென்ற ஆதி சற்பம் ஆதித்
தாயைக்கெடுக்க வந்த ஆதிசற்பம்
எந்தை விலக்குங்கனி தின்பையானால் சரு
வீசனுக்கொப்பா வீரென்ற சற்பம்
பந்தச்சற்பம் கந்தைச்சற்பம்
பாதாளச்சற்பமென் றாடுபாம்பே, ஆடு.

ஏலேலோ ஏலலல்லோ தத்தையா
ஏலேலோ ஏலலல்லோ.

1. நன்னயஞ்சேர் நோவை முனி செய்த
நாவாய் தனிலே யடர்ந்த
வனனவன்னப்பூச்சிகளின் மகிமை
வகுப்புகள்தான் அனந்தவிதம்
முு. பட்டுப்பூச்சி தெள்ளுப்பூச்சி நூற்பூச்சி
பறப்பூச்சி நூறைப்பூச்சி கோலியப்பூச்சி
யெட்டுக்காற்பூச்சி மாசன்னுசிப்பூச்சி
யிளைப்பூச்சி மழைப்பூச்சி யாறுகாற்பூச்சி
அட்டைப்பூச்சி வன்னத்தேவடியாப்பூச்சி
ஆயிரங்காற்பூச்சி முருங்கைப்பூப்பூச்சி
நெட்டைநாக்கப்பூச்சி யொட்டைக்காற்பூச்சி
நீலப்பூச்சி பிள்ளைப்பூச்சி யெரிப்பூச்சி
மட்டையோலைப்பூச்சி பஞ்சவன்னப்பூச்சி
மகமைப்பட்டுப்பூச்சி மலங்காட்டுப்பூச்சி
கட்டைநெற்பூச்சி யிந்திரகோபப்பூச்சி
கரும்பூச்சி மின்னட்டான்பூச்சி பாற்பூச்சி
கொட்டைகாய்ப்பூச்சி யொடுசகாலத்துப்பூச்சி
குரங்குப்பூச்சி விளக்கூர்துபற்பூச்சி
முட்டைப்பூச்சி மூட்டைப்பூச்சி பேய்ப்பூச்சி
முகவிருந்துப்பூச்சி சிலந்திப்பூச்சிகளுங்
முு. சீரகச்சம்பா நெல்முத்துச்சம்பா நெல்
செம்புலிச்சம்பா பொங்கச்சம்பாமணியன்
கோரைச்சம்பா புனுகுசம்ப குத்தாலை
கொடிவழுதலைச்சம்பா குங்குமச்சம்பா
பேரின்வாகுச்சம்பா வெங்தையச்சம்பா
பெருஞ்சம்பா செம்பாளை பூம்பாளை சுகுதா

சூரின்மணல்வாரி குண்டைச்சம்பா வாலா
ஞெலைச்சம்பா முளகு சம்பா பிசானம்
வேரித்தில்லை நாயகம் மடுமுழுங்கி
வெண்சம்பா கல்லுண்டை கைவிரைச்சம்பா
எரிக்கருங்குருவை காட்டளிவாணன்
ஈர்க்குச்சம்பா முளகிவாசரமுண்டன்
காரிற் கடப்புக்கார் மட்டைக்கார் பூங்கார்
கடுக்கைக்காருசிக்கார் குருவிக்கார் செங்கார்
கிரீப்பூங்கார் சண்டிக்கார் சித்திரைக்கார்.

## கடவுள் சரணம்.

1. ஒருதாவிண்ணுள் குருபதி சரணம்
உலாச சுயாதிப திரிசூரியகிரணம்
வருதாபாரதருணம்—குலஸ்திரி
மரிதாய் காழ்சரணம் தயாளோ.

2. கருணுகரமா குணபதிசரணம்
காவாதியேவையிஸ் திரியர்ந்தகரணம்
பரமேசியோனரணம் நித்திய
பவனுசாசரணம் தயாளோ.

3. நசரேத்தழகா நரபதிசரணம்
நடுநிலைதவரு தருள்செயுந்திரணம்
நிசமாய்வருதரணம்-இராட்சியும்
நிறைவாகரசரணம்—தயாளோ.

## திருப்புகழ் சந்தம்.

1. ஆதிஜம்பாரதர நமோ நமோ
அல்பாவோம் பரப்பிரம நமோ நமோ.
மாதிரபாரபர வஸ்துவே நிராதர
ஆதர கருணுகர நமோ நமோ— ஆதி.

2. சருவேசுரனே நமோ நமோ குரு
சச்சிதாநந்தா நமோ நமோ
மறைதரு பூசுரமா தவபரேச்ர
முறையின் மயேசுர நமோ நமோ— ஆதி.

3. தேவகுமாரா நமோ நமோ நர
திருஅவதாரா நமோ நமோ
மூவரிலொருவா மோக்கிடத்தருவா
சீவசொரூபா நமோ நமோ— ஆதி.

---

ஆனந்தமே பரமானந்தமே தே
வாட்டுக்குட்டி சோபன-நித்
தியானந்தமே.

1. வானந்தருஞ் சச்சிதானந்தமே இம்
மாநிலத்தில் வந்தவர்க்கு வந்தனமே ஆன

2. ஆதிமலை பரஞ்சோதி மலை சிறந்
தாதமேவாளிருந்த ஏதன்மலை
நீதிமலை நெறிஞாயமலை யெங்க
ணித்தனார் வந்த பெத்தலேக மலை ஆன

3. மனுடாவதாரனே யெங்கள்பெருமான் சீயோன்
மகள் மணவாளனே யெங்கள் பெருமான்
எனுடகணாளனே யெங்கள் பெருமான்
இயேசுக்கிறிஸ்துவே எங்கள் பெருமான்— ஆன

4. அருமைக்குமாரனே எங்கள் பெருமான் என
தாற்றுமநேசனே எங்கள் பெருமான்
பெருமைத்துரையையா எங்கள் பெருமான் மெய்ப்
பிதாவின் சொரூபமே எங்கள் பெருமான்— ஆன

5. தானுகநின்றவென் சருவேசுரா எனைத்
தற்காக்கவேணும் நீசருவேசுரா
ஞானுதிபதியே சருவேசுரா வுமை
நம்பினேன் கைவிடாதேயுஞ் சருவேசுரா— ஆன

---

ஏலேலமடி ஏலேலமடி
ஏலேலக்குயிலே — மயிலே

1. பூலோகந்தனில் மேலோகந் தொழும்
ஏலோகீம் பிறந்தார் சிறந்தார் — ஏலே

2. வெல்லை மலையினிலே ஒருவிடி
வெள்ளி யுதிக்குதையா ஐயையா
மேசையா வெள்ளியுதிக்குதையா
யேசையா வெள்ளி யுதிக்குதையா
செல்லமலை யெருசெல்லை மலையிலே
சீவனுதிக்குதையா ஐயையா
செல்லையா சீவனுதிக்குதையா
நல்லையா சீவனுதிக்குதையா — ஏலே

---

ஏலஏலஏலேல ஏலஏல அருளீசா
ஏலஏல அருளீசா
ஏலெலோகீம் அருளீசா

1. ஞாலமதிலே புரக்க நாடிவந்த குமரேசா
நாசரேசா சருவேசா ஏல

2. சித்திரப்பூங்காவனமாஞ் எருசலேமாநகரந்
தேவரெல்லாம்வீற்றிருக்குஞ் சீயோன்மலைச்சிகரம் ஏல

3. சீயோன்குமாரியர்க்கு, திருமணக்கலியாணஞ்
செயஞ்செயஞ்செயஞ்செயஞ் செயமென, முழங்குதே
திரிகோணம்—ஏல

4. ஆட்டுக்குட்டிகலியாணங் கப்பலிலே பரிசம்
ஆயிரந்தாலந்து தங்கம் வருகுதையா பிரிசம் — ஏல

5. சீதனங்களொன்றுமில்லை. வரிசைகளுமில்லைத்
தேவமணவாளனுட, திருக்கிருபைசெல்லே — ஏல

6. பட்டணத்தின் வீதியெல்லாஞ், சுத்தப்பொற் கண்ணாடி
பளிங்கொளிவாயஸ்பியைப்போற் றுலங்குதேயதின்கோடி
— ஏல

7. சகலவிதரத்தினத்தால், சமைந்தஅஸ்திவாரந்
தற்பரனூர்பட்டணத்தின், மகிமையின்சிங்காரம் — ஏல

8. பன்னிரண்டுதிருவாசல், ஒவ்வொன்றொருமுத்து
பட்டணத்தினதிபதியோ, இஸ்திரியின் வித்து — ஏல

9. ஆசனத்திலிருந்து வருஞ், சீவனதி பெருக்கம்
அக்கரையுமிக்கரையுங், கனிகள்தரும் விருக்கம் — ஏல

10. கன்னியர்கணீராடிக், காதலியுங்குளித்துக்
கலியாணமணவறையில், வாழ்ந்திருப்போங் களித்து — ஏல

11. செய்யவெள்ளைத்துகிலுடுத்துச், சீவமுடிசூடிச்
செபத்தினிலே தரித்திருப்போங், கிறிஸ்துவைக்
கொண்டாடி —ஏல

12. பரமண்டலம், பூமண்டலம், படைத்த திரியேகப்
பாரபரனைப் பாடும் வேத, நாயகனன்றுக— ஏல

13. ஊழியோடூழியே, யூழிசதாகாலம்
வாழியேவாழிமண, வாளன்மணக்கோலம்— ஏல

தானத் தானனத் தானன—தன
தந்தனத் தான்னத் தானன—தன
தானத் தனதான
தத்த தத்தன தத்த தத்தன
தனந் தத்தன தனந் தத்தன
தனன தனதன தனன தனதன
தனதனன தானன தானன
தானதத்த தனன தனதந்த தந்தன

1. முந்தப்பரம்புவியும் படைத்தோன்—முழு
லோகத்தின் பாவத்தை யுந்துடைத்தோன் ஆனந்தப் பிரதா
முச்சுடர்ப் பெருமைத் திரித்துவ தந்தைப்பர தேவன் [பன்
அட்சயக் கிருபைச் சமுத்திரன்
முனைந்தக் கடிதருஞ் சற்பனை—மிகுந்திப்புவி யொருங்கக்கெடு
முடிவினொரு திருமகனை யுலகதி னெடியவினையற முழுது
முதன்மை வான தேவாதி தேவனைச் [முதவிய
சுதனுமாவியுமான சீவனை
முன்னிட்டுக் கும்மியடியுங்கள் பெண்கள்
பொன்னிட்டுக் கும்மியடியுங்கள்.

2. வெற்றிக்கலிலேய நாட்டானை நெல்லை
வேதநாயகன் பாட்டானை யெழுமுத்திரைக் காட்டானை
சத்துருக்கணிமித்த மெத்தவுபத்திரப் பட்டானை
முந்துமுத்தம சித்தம் வைத்தெமை
மிகுந்தற்கரிசனம் பட்சமதுடன்பொற் குருசெழுந்திப்படி
நெறிவிதமிலாத தேவாதிதேவனைச் சுதனுமாவியுமான
மெச்சித்துக்கும்மி யடியுங்கள் பெண்க [சீவனை
ளிச்சித்துக்கும்மி யடியுங்கள்.

தானனத் தானனத் தானன--தன
தானத் தானனத்தானேன--தன
தானனத்தானு--தனதன
தானந்தன தானந்தன
தனந்த தந்தனத் தானேன--தன

1. ஆதித் திரித்துவத்தோர் தேவ--னுல
காவையும் ரட்சை செயுஞ்சீவ--னரர்
பாதகத்தாலே மகாஏழைப் பாவியைப்போலப் வந்ததிருப்
பாலன்கிருபாலன் கனசீலன் மனுவேலனைப்
பணிந்துமங்களம் பாடுவோம் புக
ழணிந் தணிந்து கொண்டாடுவோம்.

2. உன்னதர்க்குப் புகழுண்டாக--வளர்ந்
திந்நிலத் தோரெல்லாம் நன்றாக--வுயர்
மன்னன் றவிதேற்ற யோசேப்புடன்
கன்னிமரி பேரற்றப் பிறந்தருள்
வாகன் கனயூகன் றிரியேகன் றெய்வீகனை
வந்தித்து மங்களம் பாடுவோங்--கண்டு
சந்தித்துச் சங்கித்திட் டாடுவோம்.

---

சித்திரமாய்ப் பெண்களெல்லாஞ்
சேர்ந்து கவிபாடும்
சீமானேசுக் கிறிஸ்து வேந்தனைச்
செழிக்கத் தினங்கொண்டாடும்.

1. வித்தகச் சீயோன்மலையின் மேவுசுவிசேடசபை
மெய்த்தவ முத்தமனத்து டனித்திய
திரித்துவகத்தனை மெத்தமெத்தச் சொல்லி

2. மாசற்ற சோதியைப் போற்றவே பரன்
மகத்துவங்களை யேற்றவே
மட்டிலாமலே வேதநாயகன் கட்டும் பதங்கள் சாற்றவே
நேசத்திரித்துவ வஸ்துவை யுயர்
தேசுற்ற சத்திய கிறிஸ்துவை
நீடவே பதம் பாடவே வளைந்
தாடவே குதிபோடவே தினம்— சித்

---

நன்ன நன நன்ன நன
நன்னன நானன நன்னனே.

1. சீரின்பதேவ விஸ்தோத்திர சங்கீர்த்தன
சித்திரஞா னக்கும்மிப் பாட்டுரைக்க
பேரின்ப சத்தியப் பிரஸ்தாப வஸ்தாதி
பிதாவின்றி ருச்சுதன் காப்பாமே.

2. எங்கு நிறைந்தா னிங்குமிருந்தா
னேதுமறிந்தான் வேதமுறைந்தான்
அங்கிங்கு மிங்கிங்கு மெங்கெங்குமாய் நின்
றனந்தானந்தனைப் போற்றுவமே.

3. மைந்தர் புரிந்தவ கந்தை தவிர்ந்திட
மந்தையில் வந்துபிறந்தன ரென்
றுந்தி யுணர்ந்து கனிந்து மகிழ்ந்து வந்
தேயடிபோற்றுங்கோ தோழிப்பெண்காள்.

4. சங்கச்சுரர் தங்கட்டுகுள் வணங்கப்படு துங்கத்தவி
தங்கத்துரை யெங்கட்புரம் வந்தாரே
துங்கப் பிரசங்கச் சதுர்பொங்கப் புகழ்தங்கச்சொல்
துலங்கப் பண்பாடுங்கோ தோழிப்பெண்காள்.

1. மனுவேலே நம்மாலே
மானிடனுனர் ஏலேலே
ஏலோகீம் பெத்தலே
விடையர்கள் விடையடை கொட்டிலே
கொட்டிலிலே புல்லல்லாற்
குணமில்ல நாம்நிசம் வெல்லலாம்
வெல்லா தெல்லாம் வெல்லலாம்
மேசியா அருகினுந் துள்ளலாம்
மேவிவணங்கிக் கொள்ளலாம்
கொள்ளாதெல்லாங் கொள்ளலாங்
கும்பிட்டுத் துதிபல சொல்லலாம்.

---

தெண்டன் மிகச்சொல்லுங்கோ என்னேசர்க்குத்
தெண்டன் மிகச்சொல்லுங்கோ மாசாமிக்குத்
தெண்டன் மிகச்சொல்லுங்கோ.

1. தெண்டன்மிகவே சொல்லுந் தேவசெருசலேயின்
மண்டலாதிபன்முன் வன்னக்கிளியே நீர் தெண்

2. யெருசலேயின் மின்கா ளின்பநடையனங்காள்
சீரினதிபதிக்குத் தெண்டனிட்டேன்
பாரின்பவமேயறப் பாடுபட்டசங்கை பரமாட்டுக்குட்டிக்கு
தெண்

3. மாடப்புறுவினங்காள் வன்னக்குயிலனங்காள்
தேடிப்போய் சந்தித்துத் திரும்பீரோ
பாடுபட்டுக்கொடும் நிற்—
பந்தமறிந்தவரென் சிந்தையறிந்திலரோ. தெண்

---

நன்ன நான நன்ன நான
நன்ன நான நன்ன நான
நன்ன நான நான.

1. யெருசலேம்பட்டணத்துக் கிறைபவனிக்கெழுந்தார்
வேதமுறைமரி மேலெழுந்தார் அந்த
இறைவனிடந் தூதுசென்ற இனக்கிளிவரக்காணேன்.

2. சாலேமினதிபதிமேற் சங்கீர்த்தனம்பாடி மகிழ்ந்
திங்கிதத்துடனுடி நாடித்
தையலர்பின் கூடிச்சென்ற தத்தையை வரக்காணேன்.

3. உன்னதத்தின் றவிதுமைந்தனுக்கோலமோலமென்றே அதி
காலமேயெதிர் சென்றேபணிந்
தோசியன்னு பாடிப்போன ஓதிமம்வரக்காணேன்

4. சீயோன்மலேயின்மேலே தேவருடகூட்டமொரு
சித்திரப்பூந்தோட்டம் அங்கே
செம்மலேயே தேடிப்போன சிறுகிளிவரக்காணேன்

5. தேவாட்டுக்குட்டியற்குச் செய்தகலியாணந் தீர்க்க
தெரிசனப்பிரமாண மங்கே
தேடிமாலேவாங்கப்போன செல்லியையவரக்காணேன்

6. கோடிகோடிதூதர்சேனே கூடிவளேந்தாடுஞ்
சுவிசேடகவிபாடு மேசு
கொற்றவனே யழைக்கப்போன குயிலேவரக்காணேன்.

---

அருமை ரட்சகர் வருவாரோ—எனக்(கு)
அனந்த சுகந்தருவாரோ.

1. திருவுளமே பெருவளமே
தினந்துதியே யெனேமதியே— அரு

2. இன்பமில்லா விருள் வாங்க அவ
ரிருகையினுலெனைத் தாங்க
துன்பமெலாம் விட்டுநீங்கக் சுப
சோபனமாய் நலமோங்கத்
துணைபுரிந்து பிணைபரிந்து
துயர்பிரிந்து பெயர்தெரிந்து அரு (உன். 2, 6.)

3. முத்தமிட் டென்னையணைத்தாற்ற என்
முழு விருதயத்தையுந் தேற்ற
நித்தம் அவர்பதத்தைப் போற்ற என்
நெஞ்சின்கவலை யெல்லா மாற்ற
நினைவொடுங்கி மனமடங்கி
நினையுணர்ந்து எனைமணர்ந்து அரு (உன். 1, 2)

---

விருத்தம்.

நினைத்தது தருஞ்சகாயா
நித்திய கிருபைத்துயா
வினைத்துயர் தவிர்க்கு மாயா
விேனுத உற்பனஉபாயா
உனைத்துதி செய்வோம்லுயா
ஊழியோ ஊழிநேயா
அனைத்துள உயிர்க்குந்தாயா
அன்பையா அல்லேலூயா.

பல்லவி.

சிவதவசுபநவ தெய்வவதி
செயசொரூபியே அருள்புரி
திரிமுத லொருபொரு ளறுகுண
திவிய ரூபியே.

### அனுபல்லவி.

உவமையற்ற மெஞ்ஞான சத்தியவுன்னதத்தேவா தயாபரா
ஒப்பிலா வுண்மைப்பராபர ஒரேயேயோவா — சிவ

### சரணங்கள்.

1. ஓம்பகவா ஓம்நமா அல்பா ஓமேகாவா ஓகோ
உம்பரா கருணும்பரா ஓலம்பதந்தாவே
ஆம்பிரமா ஓம்நமா அனாதிமூலமே ஓலோலம்
அல்லேலூயா மகத்துவ மனந்தகாலமே. சிவ

---

திடமாய் முன்னுகச் செல்லுங்கோ
செய்திகளெல்லாஞ்
சீயோன்மகள்க்குச் சொல்லுங்கோ.

1. புடவியனைத்துமீட்கக் கடவுளுதித்தாரென்றிங்
குடனேயெருசலேயினிடம் நீர்சேடியரோடி திட

2. வேதாளத்தையுமாட்டி யதினரக
பாதாளத்தையும் பூட்டி
ஆதாங்குலத்தைநாட்டித் தீதாம்பவத்தை வாட்டித்
ஏதோதயைபாராட்டி யீதோவந்தாரென்றீட்டி திட

3. மோட்சவாசலைத்திறந்தார் முடிவிலாத
மாட்சிமையாகச் சிறந்தார்
காட்சிபெறவேயுன்னைப் பூச்சிய மணமுடிக்க
ஆச்சிரியமாய் வந்தார் சாட்சிநாங்களேயென்று திட

---

பவனிபார்க்கலா மாதே சாலேம்
பதிக்குவாரு மிப்போதே.

1. புவனம்யாவும்படைத்த வன்றந்திடுங்
பூரணக்கிருபைச்சோதி சிறந்திடுங்
கவனமாய்ச் சீயோன் மாதுபணிந்திடுங்
காதற்கிறிஸ்தாதித்பிரபவ டீகத்துரையார்வந்திடும். பவ

2. தீர்க்கதெரிசி சகரியாத்தீட்டின
திட்டப்பிரகாரமாய்த்தானே ரண்டு
சித்திரக்காரத்தின் மறியின்மேலேறித்
திருவுளமாக நங்கோனே
பார்க்குளெருசலே யூர்க்குளப்போஸ்தலர்
பன்னிருபேருடன் மானே கன
பத்தியுடனேசனுவென்று கும்புகள்
துத்தியஞ் சொல்லவந்தானே
ஆர்க்குங்கிடையாத ஆனந்தக்காட்சி
ஆற்றுமப்பெண்ணுக்கினி யென்னதாட்சி
மார்க்கமே மனவாஞ்சைக்கிதமே யெனின்
மாசற்சனியென்றோதிய நேசக்கனியே சென்றுமுன். பவ

3. வேடிக்கையாகவே சாலோமோன் கட்டின
மேன்மைத் தேவாலயம்பாரு மங்கு
மீண்டுகிறிஸ்து வுலாவின தாம்பிர
மாண்டமண்டபமு நேருங்
கூடிப்பின்கீதரோ னுற்றுக்கப்பாற் கொல்க
தாமலேச்சார் பினிற்சேரு மைந்து
கோலமண்டபங்கள் கூடும் பெதஸ்தாக்
குளத்திற்குளித் தன்புகூரும்
நீடும் வேதநாயகன்றமிழ்பாடும்

நெஞ்சமுருகிக்கிறிஸ்துவைத் தேடும்
பாடும்மாரணமும் வாதையுஞ் சீயோனே
பட்டுதவர்க்குன்னுணே விட்டுதுயிருந்தானே. பவ

---

## இலாவணி

பல்லவி

மாததிபிரியமாதே யெனதுரிமைமாதே—யென்
மனந்தெளிந்து சொல்லொண்ணுதே—உன்

1. மாடமேடையிடை பேடைமாமயில்களாட—மணி
மாடப்புறுக்குயில்கள்பாட—ஓகோ
ஓகைவெண்டுயில்கள் மேகலைக்கதிகநீட—ஒப்
பீரினறங்மய நீட—வி
வேகசுந்தரசீயோனே-யறி
வேமிகுந்தகனிமானே—யொளிர்
தேகலங்கிருதவிண்மீனே யிணே
தேடவெங்கணுங்காண்கிலேனினியதேனே. மாத

---

பல்லவி

வாதுசெய்யாதே சீயோன்
மாதுமயக்கமேது—கூடி
வந்தானலமிப்போது.

1. கோடிகோடி தூதாக்கள்கூடி நடனமாடிக்
கொண்டாடிச் சங்கீதம்பாடி
நீடி ஆகாயமதைமூடி யடர்ந்து சாடி
நித்தியகிரீடஞ்சூடிக் குதித்

தானந்தமானாரே அறிவானந்தமானாரே
பேடேமயிலினமே நாடும்புறாவினமே
கூட எழுந்துவாவே சற்றே
ஓடி நடந்துவாவே வாது.

---

அருமைச்சீயோனே சொல்லக்கேளொரு
வசனமெனின் கண்ணே—மூ
வாசைக்கிடமாய்ப் பாசத்துலகிற்
போகலாமோ மின்னே.

1. அன்ன நடையுஞ் சின்ன இடையும்
ஆடுமயிற்பேடை நெருங்
கரும்பின்னற்சடையு மருங்கிற் பட்டுடையும்
அமர்ந்தந றதுவானை
மின்னற்கொடியே வன்னக்கிளியே
மிருதுவசன சாடை யுயர்
விலையின் ரத்தினமே வலியசித்திரமே
விளையாடிய மேடை யென
தாவற்கினியதேனே திருக்
கோவிற்குயிலே மானே பரம
தேவப்பிரிய சீயோனே
யருந்தவக்கனியே பொருந்துபற்பனியே
யன்பிற்குணனேன்—மூ
வாசைக்கிடமாய்ப் பாசத்துலகிற்
போகலாமோ மின்னே— அரு.

---

ஏனிந்தச் சூதையா எனக்
கென்றுவந்த தவீதையா.

1. ஆனந்தநேசமே யெனை
யாண்ட கருணை விலாசமே

2. வஞ்சவுலகிலுனைத் தேடினேனின்று
மருகி மருகி முகவாடினே
னஞ்சலஞ்சலெனக் கூடினே னுன
தரியபாதமலர் சூடினேன். ஏனி

---

தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனு
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனு

1. மான்களைப்போற் சப்பாணி துள்ளினதித்தலமே
வாதைமிகு நொண்டிமுடம் நிமிர்ந்ததிந்தத்தலமே
தீன்படரும் ரோகிகளும் பேய்பிடித்தபேருஞ்
செத்தவருங் குணமாகி யெழுந்ததிந்தத்தலமே
மீன்பிடிப்போ ரறிவடைந்து தேர்ந்ததிந்தத்தலமே
மேலான பாஷைகளைப் பேசினதித்தலமே
வான்கதிர்போற் குருடர்கட்குப் பார்வைதந்ததலமே
மகத்தான தலமிதற்கு மகிமைமெத்த அம்மே — தின

2. ஊமையரும் வாய்திறந்து பாடினதித்தலமே
யொருக்காலுங் கேளாதோர் கேள்விபெற்றதலமே
காமிகளு முத்தமிக ளானதிந்தத்தலமே
கள்ளனதி சேயமதாய்க் கதிசேர்ந்ததலமே
நேமியது வாய்காட்டா தடங்கிநின்றதலமே
நிருபனுட ஆவிசுட ராகவந்ததலமே
சாமியவர் புருஷ ரூப மானதிந்தத்தலமே
சாற்றரிய அர்ச்சிட்ட தலமிதுகாணம்மே. தின

(3) நானநன்னநன்ன — நானநன்ன
(3) நானநன்னநானநன்ன — நானநன்ன.

1. வாசலிது பெண்ணே வாசலிது யேசு
மகராச ராசரின் வாசலிது
மானபரன்றவிது மோனசுதன் சலமோன்
ஞானபரன் துதிக்கும் வாசலிது

2. அழுக்கான பாவிகளு ஞானம் அற்றவர்களும்வரும்
ஆதரவிலாதவர்க்கும் வேதனையுளானவர்க்கும் [வாசலிது
யாவருக்கும் நீதிசெய்யும் வாசலிது— வாச

---

தெந்தினதினதின்னதென்னதெந்தின தின
தெந்தினதினதின்னதென்னதெந்தின

1. வந்தகுறி யேதெனினுங் கண்டுகொள்ளம்மே—யெந்தன்
மனதுக்கு ஏற்கநீ நடந்துகொள்ளம்மே
முந்தினப லனிற்பத்தி லொன்றுவையம்மே—சற்று
மோசமட ராப்படிக்கு நன்றுசெய்யம்மே
சந்தகமில் லாமற்குறி சொல்லுவேனம்மே—பல
சாஸ்திரிக ளோடெதிர்த்து வெல்லுவேனம்மே
யெந்துலகு மெச்சுகுற வஞ்சிநானம்மே—யுமக்
கேசுநாதர் பாதமே தஞ்சமாமம்மே— தெந்தி

2. துய்யதுய்ய பரிசுத்த வெள்ளச்சியம்மே—நித்திய
சோபனமுண் டாகுதுபார் வெள்ளச்சியம்மே
செய்யதவஞ் செய்யுமுமக் கின்பமாமம்மே—தவஞ்
செய்யாத பாவிகட்குத் துன்பமாமம்மே
மெய்யெனநீ எண்ணினது சித்தியாமம்மே—யருள்
வேதசுத னுலுமக்கு முத்தியாமம்மே
பொய்யல்ல என் குறியெல்லாம் கைமேலாமம்மே—யுயர்
புத்தியினு லத்தனையு முற்றுயுமம்மே— தெந்தி

தெந்தினதினதினனதெனனதெந்தின, தின
தெந்தினதினதினனதெனனதெந்தின

1. (வஞ்சி.) குறிசொல்லக் கேளம்மே குறிசொல்லக் கேள்--
கோத்திரக்கன்னியாஸ்திரியே குறிசொல்லக்கேள் ]யூதர்
அறிவி லுயர்ந்த பெத்லேம் நன்னகரில் வாழ்—சீயோன்
அவையின் குமாரத்தியே குறிசொல்லக்கேள்
மறையோ ரெழுதிவைத்த வார்த்தையின்படி—நீச
வாகனத்தின் மேலேயேசு ராசனும் வந்தான்
பொறைமிகுங் கோதையேநீ பந்தடிக்கையில்—அவன்
புறத்தளங் கண்டுபயம் பூண்டதாமம்மே.

2. (மோகினி) என்ன சொன்னாய் குறவஞ்சி சற்றுமெண்
[ணமற்—புத்திக்
கிசையாதவார்த்தையெல்லாம் வசையோடொக்கும்
நன்னயஞ்சேர்கன்னியென்று நானிருக்கையி—லென்னை
நாணமற்றுக்காதல்மிஞ்சிக் காணுதேயென்றாய்
பின்னையும்பே ரின்பச்சுரத் தண்டனையென்றாய்—தம்
பிரானின்சிநே கத்தாவல் கொண்டனையென்று
யுன்னியுன்னி சொன்னகுறி யொப்பிப்பாயானா—லவ
னாரும்பேரு மேதென்றெனக் கோதடிபெண்ணே.

3. (வஞ்சி) ஏதடி யுனைப்போலெனக் கறிமுகமோ—அவ
னிடம்பேருஞ் சொல்லுவதுங் குறிமுகமோ
காதல்மிஞ்சி நீவிடுத்த தூதுகண்டேனே—மாலை
கன்னிவாங்கப் போனஅந்தச் சன்னை கண்டேனே
சாதனையாய் நீசிநேகக் காய்ச்சல்கொண்டது—முந்தன்
றந்திரமெல் லாங்கர்த்தரின் மந்திரஞ்சொல்லும்
பேதகமற் றின்னமுனக் காகச்சொல்லுவேன்—அவன்
பெண்சேர வல்லபெரு மாப்பிள்ளையம்மே.

மந்திரம்யானறிவே, னடையே
மந்திரம்யானறிவேன்.

1. மந்திரம்யானறி வேனேசுநாயகன்
மானிடனுனபெத் லேகம் நன்னுட்டினில்
தந்தலகையுட னேபொருதிச்செயந்
தான்கொண்டுமேவவுஞ் சாகாதிருக்கவும்— மந்

2. அக்கினிகட்டின மூவரின்மந்திரம்
ஆசாப்புந்தாவீதும் பாடினமந்திரஞ்
சிங்கக்கெபியினிற் சிங்கத்தின்வாய்தனைச்
சித்திரமாய்க்கட்டுந் தானியேல் மந்திரம்
உக்கிரஅக்கினி வீழ்ந்தழிவாகவே
யுற்ற எலியாசு பண்ணின மந்திரந்
தீர்க்கதெரிசிகள் அப்போஸ்தலன்மாருஞ்
சாற்றினதுமெனக் ஏற்றதுமாகிய— மந்

---

## இவருக்கு இவர் ஜோடி என்றபடி (கூட்டாளி)

நூவன் வந்தானே மறைப்புலி
நூவன் வந்தானே.

1. கற்பனேமோசேக் காரோனேப்போலவுங்
கற்றஎலியாவுக் எலிசாபோலும்
அற்புதயோசுவா காலேப்பாகவு
மந்தப்பவுலுக்குத் தீமோத்தேபோலவும்
ஆகத்து விவேகத்துடனே—யடர்ந்த சி
னேகத்தியல் பாகத்தினமே—பெரும்புகழ்
அர்த்தத்தொடு மெத்தக்கலை கற்றுத்தவ முற்றுக்கடி
யச்சத்திட ரற்றுச்செப அர்ச்சிப்பொடு நற்பத்தியி

னிரத்தக்குரு சுச்சித்திர வெற்றிக்கொடி கட்டிக்கன
நெற்றிக்கிடை பொற்பட்டமு மிட்டுச்சபையைப்பற்றியே-நூ

2\. சத்தியவல்தெஞ்சஸ்க் கல்விக்கெஞ்சஸ்ப்போலுஞ்
சானுசுக்குத்துணை யோராமைப்போலவும்
உத்தலுத்தருக்குக் கல்வினைப்போலவு
மோங்குசிங்கனுக்குப் பாங்கனைப்போலவும்
ஓதிமிகுத்துச் செபச்சித்தமாய்க்—கிறிஸ்துவி
னீதிமிகுத்துத் தவச்சுத்தமாய்ச்—சிங்கனைக்கண்
டோலமுயர்த்திப்பயிற்கத்தி யோசனைவைத்துச்சிரித்திட்டு
ஓவியமிட்டுத் துகிற்கட்டி யோடிநடித்துப் பொழிற்புக்கி
நூல்வலைகட்டித்திறப்பட்டு நூதனவித்தைச்செயற்கட்டு
நூபுரம்ரெட்டைப் பதத்திட்டு நோன்மைமிகுத்துக் கையைக்
[கொட்டி.—நூவன்

---

தினதிஞனத்தினதிஞனத் தினதிஞனத்தினதிஞ
தென்ஞதெந்தினத் தென்ஞதெந்தினத் தென்ஞதெந்
தினத்தினதிஞ

1\. கடவுள்பதத்தை வணங்கி வணங்கிக்
கருணைமதத்தி லிணங்கியே
கத்தனுரைத்த பத்துவழியின்
சுத்தவலையை விரித்துமே
திடமனத்தோடு செபித்துச் செபித்துக்
செகத்தில் ஞானக் கண்ணியைத்
தீர்க்கமாக நோக்கிக்குத்தடா
சிங்காரப்பெத்தலே மலைக்குழுவா — தின

2\. கதித்தகருத்தின் மனத்திஞனதி
கருணைக்கிருபா சனத்திஞன்

கஞ்சமலர்ச்செங் கரத்தினன்அப
ரஞ்சிக்குயர்பொற் சிரத்தினன்
விதித்துவலையைத் துதித்துவாங்கி
விண்ணினிலேகண் டோங்கியே
விரைந்துவிரைந்து பறந்துகுத்தடா
வேதாந்தப்பெத்தலே மலைக்குழுவா— தின

3. வித்தகத்திட நயத்திலேசெப
பொத்தகத்துட மயத்திலே
வெல்லையம்பதி நாட்டிலேயொளி
செல்லுமின்பதி வீட்டிலே
யுத்தமத்துட னுற்றவர்க்கு
ளூற்றபரனைப் பற்றியே
யோடியாடிப் பாடிக்குத்தடா
யுல்லாசப்பெத்தலே மலைக்குழுவா— தின

4. கட்டைக்கண்ணியை நிமிர்த்துக்குத்தினற்
காடையுமட்டு மேகுழுவா
நெட்டைக்கண்ணியை நெருக்கிக்குத்தினல்
நீர்க்காக்காய்படு மேகுழுவா,
மட்டைக்கண்ணியை முறுக்கிக்குத்தினல்
வவ்வாலும்படு மேகுழுவா,
சிட்டுக்கண்ணியைத் திறந்துகுத்தடா
சிங்காரப்பெத்தலே மலைக்குழுவா— தின

———

(சிறுவர்களுக்கேற்ற ராகம்.)

தானுதந்தனத்தனத்தனுதன தானுதந்தனத்தனத்தனு
தானுதந்தனத்தனத்தனுதன தானுதந்தனத்தனத்தனு

1. தேவசுதனே வேண்டடா மிகுந்
தேவபத்தியினில் மூண்டடா
சீவவிளக்கைத் தூண்டடா மாயச்
செகத்தைக்கடந்து தாண்டடா — தானு

2. மந்திரம் பத்தையுஞ் சொல்லடா விசு
வாசமாய் முற்றினும் நில்லடா
தந்திரப்பேயினைக் கொல்லடா பக்தித்
தாவுகளைப்பார்த்துச் செல்லடா — தானு

3. சிங்காரக் காவெனும் வனத்திலே நல்ல
திறத்திலேயொரு புறத்திலே
வங்காரப்பட்சிகள் பறக்குதே யெந்தன்
வாயிலே நீரூறிச் சுரக்குதே— தானு

4. காற்றுள்ளபோதே தூற்றிக்கோ இரு
கண்ணுள்ளபோதே தோற்றிக்கோ
ஊற்றுள்ளபோதே யிறைத்துக்கோ திரு
வுரையுள்ளபோதே நிறைத்துக்கோ — தானு

---

தந்தனத்தானதனுதனதந்தனத்தானு—தன
தந்தனத்தானதனுதனதந்தனத்தானு

1. காடைக் கறியினில் பேடைக்கறிருசி மெய்யே—அதைக்
காட்டாமற் கொண்டுபோய் கூட்டுக்கறிரண்டு செய்யே
தேடிஇசராவே லர்அதற் காய்க்குறு குறுப்பார்—காடை
தின்னக் கிடையாட்டால் தெய்வத்தையே முறுமுறுப்பார்—

2. வேட்டைக் கறிக்குமா நாட்டம டாயீ சாக் கண்ணே—னிவ்
வேளைக்கே தாகிலுங் கொண்டுபோய் மாய்மாலம் பண்ணேன்
காட்டுக்கோ ழிக்கறிக் காட்டுக்கறி கெட்டுதையே-பெட்டைக்
கான மயிற்கறி யானதெல்லா.மூழு நெய்யே— தங்

3. வெட்டுக் கிளியொவா னுக்குமெத்தமெத்தப் பிரிய—மதை
மிச்சமாய்க் கொண்டு போனுற்கொடுப் பான்றீட்சை தூரியங்
கட்டிக் கொழுப்புருக்கு நெய்யடா அன்னப் பட்சி—திவ்விய
காரிகை சீயோன் மகள்வாங்கு வானு மெச்சி — தங்

4. பெட்டைக் கொக்குக்கறி சுட்டுத்தின்றுலொரு போக்கு —
போதத் துவட்டல தாகப் புளியிட்டே ஆக்கு [அதைப்
சிட்டுக் குருவியைத் துட்டுக்கி ரண்டாகச் சொல்லடா-விலே
சேராட்டால் ரண்டுகா சுக்கஞ்ச தாகவே வில்லடா — தங்

5. வன்னச் சிறகியைத் தின்னத் தின்னயினித் திருக்கு—மணி
மாடப் புறுக்கறி தேடக்கிட் டாதுடல் பெருக்கும்
நன்னிச் சிங்கிவன்னச் சின்னசிட் டெங்நேரம் பொரிப்பாள்—
[செங்கா
ணரைக் கறிக்கொருக் காலே மெத்த மெத்தச் சிரிப்பாள்
— தங்

---

சிங்கியைக்காணேனே—விசுவாச
சிங்கியைக் காணேனே.

1. சிங்கியைக் கற்பலங் காரியை நாரியைச்
சித்திரப்பெத்தலேம் அத்தனைப்பாடிய
மங்கள விநோதசங் கீதமா தாந்த
வேதாந்த மதங்கியென்வங்கண— சிங்

2. தாராவை மாடப்பு றாவைக் குயிலியைச்
சல்லாப வுல்லாச சையோக சம்போகப்
பேரான ஞானச் சுகந்தருகும் அன்னப்
பேடையைச் சாடையாய்ப் பேசுங்கிளிதனைச்
சீரான தோகைம யிலைவடிந்தசெந்
தேனை யமுர்தத்தைச் செங்கரும் பானதை
நேரான மோக்ஷ பாக்கியத்தையிரு
நேத்திரத்தை ஞானப் பாத்திரத்தையெந்தன்— சிங்

---

## சிங்கன்—சிங்கி நடிப்பு பாடல்

1. காலுக்குக்கீழே கடிக்கும் சற்பத்தைக்
கடிந்துஉதைத்திட்டதேன் சிங்கி?—பாம்
பாலவிஷத்தை அகற்றின ஏசுவின்
அற்புதத்தாலடா சிங்கா. (பிறவி வேதனை)

2. முற்றுங்கறுத்து முழங்கால்தடித்தது
மோசமதென்னடி சிங்கி?—நான்
சற்றும்விடாமல் செபித்துக் கிறிஸ்துவைச்
சாற்றினதாலடா சிங்கா.

3. மேலேஇடுப்பி லிறுக்கி நெருக்கிய
வித்தையிதென்னடி சிங்கி?—நித்திய
சாலோக பெத்தலே நாதர்சமைப்பித்த
சத்தியக்கச்சையே சிங்கா.

4. மாருக்குநேரே கழுத்தில்கிடக்கிற
ஆரமதென்னடி சிங்கி?—வெல்லை
யூருக்கு நாயகர் பேருக்குப்போட்ட (சிலுவை) முத்து
ஆரக்கண்டியடா சிங்கா.

5. செக்கச்சிவந்துஉன் உதடுஅழகானமா
முக்கியஞ்சொல்லடி சிங்கி?—நம்
பக்கிஷப்பெத்தலே நாதர்விலாவிலே
பாய்ந்த குருதியாற் சிங்கா.

6. வேரில்லாப்பூமரம் போல்உன்றன்கொண்டையில்
வேடிக்கைப் பூவேண்டி சிங்கி?—ஆரோ
னரியன் கைக்கோல் தளிர்த்துப் பூத்தசெய்தி
ஆய்ந்திலையோகாணுஞ் சிங்கா. (4 மோ. 17 : 8)

7. வேதத்திலுள்ள கருத்தைஎடுத்து
விநோதமாய்ச் சொன்னதார் சிங்கி?—சதுர்ப்
போதக சாஸ்திரி என்றபெயர்பெற்ற
வேதநாயகன் காண் சிங்கா.

---

## வாழ்த்து.

### வெண்பா.

ஊரெங்கு ஓடி உலைவதேன் பெத்தலேம்
சீர்ஏசு நாதரைநாம் சேர்ந்தக்கால்—தீருமே
பாவம் பிணிநோய் பசாசு நர கம்மரணம் (6)மம்போம்
பாவலரே பாடிமகிழ் வோம்.

வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
மானுவேலை வாழ்த்துகிறேன்.

1. அட்டதிக்கு உடையானை
அனுப்பவமும் அடையானை
மட்டில்லாத கொடையானைப்
படையானை வாழ்த்துகிறேன்.

2. வருகலியை உரித்தோனை (பிறவியை உயிர்த்து எழுந்து)
மனுவடிவைத் தரித்தோனை
தருங்கிருபைத் திறத்தானைச்
சிரத்தானை பாடுகிறேன்.

3. ஒரு மலையில் மறுரூபம்
திருமலையில் செபரூபம்
அருள் மலையில்உயிர் ஈயும்
ஆண்டவனை வாழ்த்துகிறேன்.

---

முற்றிற்று.

(ஓம்: ஆம்:) ததாஸ்து: (Sanctum சாந்தி:)

---

Printed by S. Kalyanesundaram at the Sri Janardana Prinling Works
Ltd., T. H. S. Road, Kumbakonam and Published by
V. Theo-Philus, Tiruthuraipoondi.